★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: [illegible]

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: தை 15உ சனி (28—1—56) ★ ★ வெளியீடு: தை 16உ ஞாயிறு (29—1—56) [இதழ் 104

நெய்வேலிக்கு அருகில் உரத் தொழிற்சாலை!

'நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டத்துடன், திட்டத்தை இணைத்தாற்போல், மற்றொரு உரத் தொழிற்சாலையும் நிறுவப்படும்' என்று, மத்திய உற்பத்தி அமைச்சர் கே. ஸி. ரெட்டி திருவனந்தபுரத்தில் தெரிவித்திருக்கிறார்.

இத்துடன், தென்னாட்டில் ஒரு அலுமினியத் தொழிற்சாலை அமைப்பது குறித்து மத்திய சர்க்கார் பரிசீலனை செய்துவருவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தில் பூமிக்குள்ளே தேங்கி நிற்கும் தண்ணீரை அப்புறப்படுத்த 16 'இராக்கத பம்பு'கள் வந்தன என்றும் அவர் தெரிவித்தார்.

தாயகம் முரசு கொட்டுகிறது

பிப். 20-ல் பொது வேலைநிறுத்தம்

கடை - பள்ளி - சினிமா - ஓட்டல்கள் மூடிக்கிடக்கும்

ஆலைகளும், தொழிற்சாலைகளும் அடைத்துக் கிடக்கும்

போக்குவரத்துச் சாதனங்கள் செயலற்று நிற்கும்

டில்லி போக்குக்கு நாடெங்கும் கண்டனம்

சர்வகட்சித் தலைவர்கள் மாநாட்டில் போர்த் திட்டம்

பி. டி. இராசன் முன்னணித் தலைவரானார்

செல்வாக்குள்ள செயல் கமிட்டி அமைந்தது

ஆலோசனை மாநாடு வழிகாட்டுகிறது

சென்னை, ஜன. 28—

சென்ற பத்து நாட்களாக நாட்டு மக்கள் ஆவலோடு எதிர் நோக்கிக் கொண்டிருந்த சர்வ கட்சித் தலைவர்கள் மாநாடு நேற்று மாலை கூடி, எழுச்சி மிக்கதோர் திட்டம் வகுத்திருக்கிறது.

தாயகத்துக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதியை எதிர்த்துப் போராடி உரிமையை நிலைநாட்டுவது என்றும், அதற்கான கிளர்ச்சிக்காக எத்தகைய கஷ்ட நஷ்டத்தையும் ஏற்பது என்றும் சர்வ கட்சி மாநாட்டில் கலந்துகொண்ட எல்லாத் தலைவர்களும் உறுதி எடுத்துக்கொண்டனர்.

தாயகத்தின் கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையில் பிப்ரவரி 20-ந் தேதி நாடெங்கும் பொது வேலை நிறுத்தம் நடத்துவது என்ற முக்கியமான திட்டம் தீர்மானிக்கப்பட்டதுடன், இதற்கான செயல் கமிட்டியும் அமைக்கப்பட்டது.

ஆலைகள், தொழிற்சாலைகள், கடைகள், பள்ளிக்கூடங்கள், சினிமா-நாடகக் கொட்டகைகள், ஓட்டல்கள், உணவு விடுதிகள் எல்லாம் பிப்ரவரி 20-ல் மூடிக் கிடக்கும்.

எல்லா இடங்களிலும் வேலைநிறுத்தம்! நாடெங்கும் கண்டனக் குரல் எழுப்பப்படும்!

போக்குவரத்துச் சாதனங்கள் ஸ்தம்பித்துக் கிடக்கும். நாடு முழுவதும் மக்கள், டில்லி அளித்துள்ள அநீதியான தீர்ப்பை எதிர்த்துக் கண்டனம் தெரிவிப்பார்கள்.

தமிழகத்தில் இதற்குமுன் எப்போதும் ஏற்பட்டிராததோர் கூட்டணி அமைந்துவிட்டிருக்கிறது.

கம்யூனிஸ்டு, சோஷலிஸ்டு, பிரஜா-சோஷலிஸ்டு, தமிழரசுக் கழகம், இணைப்புக் கமிட்டி, எல்லைக் கமிட்டி, எழுத்தாளர் கழகம், நடிகர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட பார்லிமெண்டரி கட்சி, ஜஸ்டிஸ் கட்சி ஆகிய கட்சிகள் யாவும் கலந்துகொண்டன.

புதுவைப் பகுதியின் சார்பில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் கலந்துகொண்டு, எழுச்சிமிக்க உரையாற்றி, செயல் கமிட்டியில் அமர்ந்திருக்கிறார்.

காங்கிரஸ், திராவிடர் கழகம் தவிர, மக்களுடன் நீங்காத தொடர்பு கொண்ட எல்லாக் கட்சிகளும், இந்தப் பொது வேலைத் திட்டத்துக்கு ஆக்கம் அளித்துள்ளன.

ஆலைகளிலும், தொழிற்சாலைகளிலும், தேவிகுளம்—பீர்மேடு குறித்துப் பாட்டாளி மக்களிடம் எத்தகைய மனக்கொதிப்பு இருக்கிறது என்பது பிப் 20-ல் தெரிந்துவிடும்.

பிப்ரவரி 20-ல் பொது வேலைநிறுத்தம் பலாத்காரமற்ற முறையில் அமைதியாக, நியாயத்தின் அடிப்படையில் நடத்தப்படவேண்டும் என்று எல்லாத் தலைவர்களும் மனப்பூர்வமாகக் கருதுகிறார்கள்.

அதன்படியே பொது வேலைநிறுத்தம் நடைபெறுவதற்கான முயற்சிகள் துவக்கப்பட்டு விட்டன.

தமிழரின் உரிமையை மீட்க நடத்தப்பட இருக்கும் அறப் போருக்கான செயல் கமிட்டித் தலைவராக உயர்திரு. பி. டி. இராசன் அவர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம், திராவிட முன்னேற்றக் கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் ப. ஜீவானந்தம், சோஷலிஸ்டு கட்சித் தலைவர் எஸ். சி. சி. அந்தோணிபிள்ளை, பிரஜா சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் ஆகிய ஐவரும் செயலாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தமிழரசுக் கழகச் சென்னை மாவட்டக் கிளையின் தலைவரும் 'உமா'பத்திரிகை ஆசிரியருமான தோழர் உமாபதி பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கமிட்டியில் உறுப்பினர்களாகப் புதுவைப் பகுதி சார்பில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், வி. சுப்பையா, ஜஸ்டிஸ் கட்சி சார்பில் பி. டி. இராசன், கே. சி. சுப்பிரமணியம் பார்-அட்-லா, திராவிட பார்லிமெண்டரி கட்சித் தலைவர் சுயம்பிரகாசம், செயலாளர் எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ., கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்கள் ப. ஜீவானந்தம், மணலி-கந்தசாமி, ஏ. எஸ். கே.அய்யங்கார், தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம், சின்னஅண்ணாமலை, உமாபதி, வடஎல்லைப் பாதுகாப்புக் கமிட்டியின் சார்பில் கே. விநாயகம் எம்.எல்.ஏ., சித்தூர்-சீனிவாசன், ஷெட்யூல்டு கட்சி சார்பில் ஏ. ரத்தினம் எம்.எல்.ஏ., சுந்தரராஜன், எழுத்தாளர் சார்பில் நாரண-துரைக்கண்ணன், நடிகர் சார்பில் டி.கே.சண்முகம், இணைப்புக் கமிட்டி சார்பில் பிளச்சர், செல்லசாமி பார்-அட்-லா, சோஷலிஸ்டு சார்பில் எஸ். சி. சி. அந்தோணிபிள்ளை, சின்னசாமி, பிரஜா சோஷலிஸ்டு சார்பில் சின்னதுரை, ஏ. சுப்பிரமணியம், தமிழ்ப் பேரவை சார்பில் கசபதி நாயகர் எம்.எல்.சி., திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் ஆகியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தேவிகுளம், பீர்மேடு பற்றி தி. மு. கழகம்

★

31-1-56 மாலை 6-மணிக்கு சென்னை-வண்ணாரப்பேட்டை கல்லறை மைதானத்தில், அண்ணா, மற்றும் பலர் பேசுவர்.

தோழியர் பி. எஸ். செல்வா இயக்கப் பாடல்கள் பாடுவார்.

★

தீர்மானங்கள்

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :—

1. தமிழரின் மொழி, கலை, வாழ்வு, வளம் ஆகியவற்றிற்கான பாதுகாப்பும் வளர்ச்சியும் மொழி வழி அரசு மூலமே கிடைக்கும் என்பது பெருவாரியான மக்களின் கருத்து. இது, ஜனநாயகக் கோட்பாடுகளின் படி ஏற்கனவே விளக்கமாகத் தெரிவிக்கப்பட்டிருப்பதோடு, தேர்தல் மூலமும், தீவிரப் போராட்டம்மூலமும் இந்தக் கருத்து நெடுங்காலமாக வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் இதற்கெல்லாம் மாறாக மொழி வழி அரசுக் கோரிக்கைக்குக் கேடு நேரும் வகையில், தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றின்கரை, கொச்சின் சித்தூர், பாலக்காடு ஆகிய தாலுகாக்களின் தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்தோடு இணைக்காமல் விட்டது அநீதி என்பதைத் தமிழகத்திலுள்ள எல்லாக் கட்சியினரும், சென்னை சட்டசபை

(4-ம் பக்கம் பார்க்க)

நெருக்கடியான நேரத்தில் தி. மு. கழகப் பொதுக்குழு

சிதம்பரத்தில் ஏற்பாடுகள் பூர்த்தி

சென்னை, ஜன. 28—

தமிழகத்தின் மிக நெருக்கடியானதோர் நேரத்தில் திராவிடர் தம் விடுதலைப் படையான முன்னேற்றக் கழகத்தின் பொதுக் குழு நாளைய தினம்—29-ந் தேதியன்று சிதம்பரம் நகரில் கூடுகிறது.

பொதுக் குழுவில், தமிழகத்தை எதிர்நோக்கியுள்ள முக்கியமான சிக்கல்கள் விவாதிக்கப்படவிருக்கின்றன என்பதுடன், கழகத்தின் முக்கியமான—அவசரமான நடவடிக்கைகள் குறித்தும் முடிவுகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

சென்னை நகரில் நேற்று கூடிய சகல கட்சித் தலைவர்கள் மாநாட்டின் முடிவு, தி. மு. கழகப் பொதுக்குழுக் கூட்டத்தின் முக்கியத்துவத்தை மேலும் அதிகரிக்கும்.

கழகப் பொதுக் குழுக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை தில்லைக் கழகத் தோழர்கள் சிறப்பாகச் செய்துவருகின்றனர்.

தோழர்கள் சக்கரவர்த்தி, பொன்-சொக்கலிங்கம், பாலகுருசாமி, திருவேங்கடன், கோபால், இராமகிருட்டினன், இராசேந்திரன், தென்னார்க்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் சாம்பசிவம், தில்லை-வில்லாளன் ஆகியோரடங்கிய குழுவினர் கூட்ட ஏற்பாடுகளை முன்னின்று செய்து வருகின்றனர்.

நகரின் முக்கிய வீதிகளில் எல்லாம் வரவேற்பு வளைவுகள், தோரணங்கள் முதலியன அமைக்கப்படுகின்றன.

மாநில மெங்குமிருந்து வரும் பொதுக்குழு உறுப்பினர்களை வரவேற்கவும், உபசரிக்கவும் தொண்டர் படை உருவாக்கப்பட்டிருக்கிறது.

சிதம்பரம் தோழர்கள் பெரும் உழைப்பைச் செலவிட்டுச் செய்து வரும் இந்த ஏற்பாடுகளை, கடந்த கிழமையிலேயே தோழர் மதியழகன் அவர்கள் பார்வையிட்டு வந்திருக்கிறார். இப்போது அநேகமாக எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தியாகிவிட்டன.

நாளையதினம் நடைபெறும் பொதுக்குழுவின் முடிவுகளை விளக்கிச் சிதம்பரத்தில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெறும். மாபெரும் பொதுக் கூட்டம் முன்றில் கழக முன்னணி வீரர்கள் பேசுவர்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 28—1—'56 சனி

பரதேசியாரும், உபதேசியாரும்!

'போனால் என்ன? போகட்டும்; அவர் பெரிய மனிதர்; நடுநிலைபாளர்; அவர் தந்த தீர்ப்பை எப்படி எதிர்ப்பது?' என்று பேசுகிற இந்த நாட்டைப் பற்றித் துளியும் கவலையில்லாத கனவான்கள் 'கனம்'களாக ஆக்கப்பட்டிருப்பதால்தானோ என்னவோ, டெல்லி ஏகாதிபத்தியவாதிகள், 'நாங்கள் ஏறி மிதிக்கிறோம் உங்கள் தலையில்; நீங்கள் குனிந்து கொடுங்கள்—மேலும் மிதித்துத் துவைக்கிறோம்; இன்னும் வளைந்து கொடுங்கள்' என்பது போன்ற முரட்டுத்தனமான போக்கில் திராவிடர்களை நடத்திக்கொண்டிருக்கின்றனர்.

'இந்தியா ஒரே நாடுதான்; நாம் எல்லோரும் இந்தியர்கள்தான்; நமக்குள் சண்டை ஏற்பட்டால் அது இந்திய ஐக்கியத்திற்குப் பெரும் ஆபத்து' என்று, அந்த ஏகாதிபத்தியவாதிகள் ஓலமிடாத நாட்கள் இல்லை, இப்போது!

தங்களுடைய பிற்போக்கான ஏகாதிபத்திய ஆட்சிமுறையை எதிர்த்து உரிமைக் குரல் எழும்போது, "இந்திய ஒற்றுமையைக் காப்பாற்றுவோம் வாரீர்; 'ஒற்றுமை'யே உயர்வு தரும்" என்ற உபதேசத்தின் மூலமே அந்த உரிமைக் குரலை அமிழ்த்திவிடலாம் எனக் கனவு காணுகின்றனர் போலும், இந்தப் புதிய ஏகாதிபத்தியவாதிகள்!

'ஒன்றுதான் இந்தியா' என்றால், 'ஓரவஞ்சனைக்கு ஆளாக்கப்படும் நிலையில் தென்னாடு இருப்பதேன்?'—என்று, 'ஒற்றுமை'க் கீதத்தை உச்சஸ்தாயியில் இசைத்துக் கொண்டிருந்த தென்னாட்டுப் பிற்போக்காளரில் சிலர்கூட, துணிவு பெற்றுக் கேட்டிருக்கிறார்கள்.

'மித்திரனும்', 'மெயிலும்' அம்புஜத்தம்மாளும், அனந்தராமகிருஷ்ணனும், ஆனி மாஸ்கரின் அம்மையாரும், நடேசனார்களும் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாட்டிற்கு இழைக்கப்பட்ட அக்கிரமம் குறித்துத் தங்கள் நிறத்திற்கும், உள்ள உரத்திற்கும் ஏற்ப உரிய இடங்களில் கண்டனம் தெரிவித்தனர்; பழங்கதையாகிவிட்ட சம்பவங்கள் அவை!

'இரண்டாம் திட்டம், எல்லோருக்கும் சமநீதி வழங்கும்; நீதிமான்கள்தான் எம் எஜமானர்கள் என்பது நிரூபிக்கப்பட்டுவிடும்,' என்று வீராப்புப் பேசிய கொங்கு நாட்டு 'வீரர்'கள், வாய்ப்பறையால் ஊர்ப்பகையைத் தேடிக்கொண்டது தான் மிச்சம். கரி பூசிய முகத்தை நிமிர்த்திக்காட்ட நெஞ்சத்தில் பொங்கிவழிந்த ஏமாற்றம், வெட்கம், வேதனை இடந்தராவிட்டாலும், 'குப்புற விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை' என்பது போல, 'கிடைத்தவரையில் நியாயம் தான்' என்று பேசிக்கொண்டிருந்தார்கள்.

நாலாறு இருநூறாகி, இருநூறு நூற்றெண்பதாகி, நூற்றெண்பது என்ன ஆகுமோ என்ற நிலையில்தான், சென்னை 'கனம்'கள் தயாரித்த இரண்டாம் திட்டம் இருந்துகொண்டிருக்கிறது.

'இந்தியப் பேரரசினரே நேரடியாக மேற்கொள்ளவிருக்கும் பெரும் தொழில் திட்டங்களில் சிலவற்றையேனும் ஏற்கனவே பின்தங்கிய நிலையிலிருக்கும் தென்னாட்டில் துவங்கவேண்டும்,' என்று ஆந்திர முதலமைச்சர் கோபாலருடன் சேர்ந்து கூட்டுக் குரல் எழுப்பினார், 'கனம்' சுப்பிரமணியனார்; கேளாக் காதினராக மட்டும் இருக்கவில்லை டெல்லியினர் — 'திட்டத்தினை மேலும் வெட்டுவோம' என்று கூறியிருக்கின்றனர்! 'கனம்' சுப்பிரமணியம்தான், 'தங்கள் சித்தம்—எங்கள் பாக்கியம்' என்று கூறிடும் கல்யாணகுண விசேடமுடையவராயிற்றே!

இரயில்வேத் துறை வளர்ச்சிக்காக டில்லி ஏகாதிபத்தியவாதிகள் தீட்டியிருந்த இரண்டாம் திட்டத்தில் ஒருபகுதியை வெட்டிவிடப் போவதாகவும், அந்த வெட்டப்படும் பகுதித் திட்டத்தில்தான் தென்பிராந்திய இரயில் போக்குவரத்து வசதிகள் அதிகரிப்பதற்கு வாய்ப்புகள் இருந்தன என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது கடந்த கிழமையில்!

நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் செலவில் வளர்ச்சி பெறப்போகும் இரயில் பாதைகள் எல்லாம் வடக்கேதான். தென்னாட்டில் திட்டமிடப்பட்டிருந்த புதிய பாதைகள் அமைப்பு, ஏற்கனவே உள்ளவற்றை விரிவாக்குதல் இவையெல்லாம் மூன்றும் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில்தான் கவனிக்கப்படுமாம்; செய்தி தரப்பட்டிருக்கிறது, டெல்லிப் பட்டணத்திலிருந்து!

அதே டில்லிவாழ் பெரிய மனிதர்கள்தான், 'இந்தியா ஒரே நாடுதான்; நாம் எல்லோரும் இந்தியர்களே; நமக்குள் ஒற்றுமை வேண்டாமா?' என்று உபதேசம புரிந்து, உண்மைக்குத் திரையிட நினைக்கும் 'பெரிய மனிதர்'களாக வாழ்கிறார்கள்; வாழட்டும்!

சென்னையில் உள்ள வடநாட்டவரின் தொண்டரடிப் பொடியாழ்வார்களான மந்திரிகள் டில்லியை வற்புறுத்தப் போகிறார்களாம், தென்னாட்டு இரயில் போக்கு-வரத்தை விரிவாக வளர்ச்சிபெறச் செய்ய வேண்டும் என்று! அறிவித்திருக்கிறார்கள் சட்டசபையில்; ஆனால், இவர்களது வற்புறுத்துதல்கள் என்ன பலனைப் பெறும் என்பது நாட்டவர் உணர்ந்துள்ள ஒன்றுதான்.

அதிகாரக் கத்திரிக்கோல் கொண்டு, பாதிக்கும் மேலாக டில்லி ஏகாதிபத்தியவாதிகள் வெட்டி வீசிஎறிந்த இவர்களது இரண்டாம் திட்டத்தின் பகுதிகள் குப்பைக்கூடையிலிருந்து சிரித்துக்கொண்டிருக்கின்றனவே—அவை கூறவில்லையா, பக்தவத்சலங்களின — சுப்பிரமணியங்களின் வற்புறுத்துதல்கள் என்ன பலன் பெறுமென்பதை!

பரதேசிக் கோலத்தில், 'எங்களுக்கும் கொஞ்சம் தாருங்களேன்' என்கின்றனர், இந்த மாநில 'கனம்'கள்; 'ஒற்றுமையாயிரு' என்று உபதேசிக்கின்றனர், அந்தப் 'பெரிய மனிதர்கள்' !

பண்டிதரின் பழைய பல்லவி

'ஒற்றுமை'க்கு ஆபத்து என ஓலம்

எதிர்ப்பாளர்கள்மீது வழக்கமான வசைமாரி

'இந்தியா ஒரே நாடுதான்' எனச் சாதிக்க நினைக்கும் பரிதாபம்

புதுடில்லி, ஜன. 25—

"'இந்தியா ஒன்றுதான்' என்பதனுடையவும 'இந்தியாவின் ஒற்றுமை' என்பதுடையவும் முக்கியத்துவம் முழுவதையும், இந்திய மக்கள் தெளிவாக உணர்ந்துகொள்ளவேண்டும் என்று விரும்புகிறேன்.

"இந்தியாவின் 'ஒற்றுமை'யை நாம் புரிந்துகொள்ளவேண்டும். வாய்ளவில், 'இந்தியா ஒன்றுதான்' என்பது ஒரு அம்சம்; ஆனால் மிகத் தேவையானது, உள்ளபூர்வமாக 'இந்தியா ஒரே நாடுதான்' என்று உணர்ந்து செயல்படுவது தான்.

"பம்பாயிலும், கட்டாக்கிலும் நிகழ்ந்த பலாத்காரச் சம்பவங்கள், நாம் ஒரே நாட்டில்தான் வாழ்கிறோம் என்பதை முழுவதுமாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதைத்தான் எடுத்துக் காட்டுகின்றன.

"இந்தியாவில் மாநிலங்களைத் திருத்தி அமைப்பது என்பது வெறும் நிர்வாக சவுகரியத்திற்காக மட்டுமே நடைபெறுகிறது. ஏதாவது ஒரு குறிப்பிட்ட முடிவை எவரேனும் ஏற்க முடியாமலிருக்குமானால், அதனை அமைதியாக, சாவதானமாகத் தெரிவிக்கவேண்டும்.

"மாநிலப் புது அமைப்புப் பற்றி ஏதேனும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் அந்த முடிவுகள் எல்லாம் நிரந்தரமான—சாசுவதமானவை அல்ல; இந்த முடிவுகள்தான் இறுதியானவை என்பதல்ல; ஆனால், பம்பாய், கட்டாக், மற்றும பல இடங்களில் நிகழ்ந்தவை, இந்தச் சிக்கலை முழு முட்டாள்தனமான நோக்குடன் அணுகியதையே தெரிவிக்கின்றன.

"அத்தகு ஒரு நோக்கம இந்தியாவிற்குத் தீங்கு பயப்பது; இந்தியாவின் 'ஒற்றுமை'யைச் சிதைக்கவல்லது.

"ஒன்றி வாழ்வதை விடுத்து, ஒருவருடன் ஒருவர் முட்டி மோதிச் சண்டையிட்டுக்கொள்ளும் இந்தியாவின் 'நெடுங்கால நோய்' தலைதூக்குவதை, இந்தக் குழப்பங்களில் நாம் கண்டோம்.

"நாம் இப்படி நடந்துகொள்ளும்போது வெளிநாட்டவர் நம்மைப் பார்த்துச் சிரிக்கிறார்கள்.

"மாநிலங்களைத் திருத்தி அமைப்பது என்பது, இந்தியாவின் எந்தப் பகுதியையும், எந்த ஒரு வெளிநாட்டவரிடம மாற்றித் தந்துவிடுகிறோம் என்பதல்ல. எல்லைகள் எப்படி அமைந்தாலும், மாநிலங்கள் எல்லாம் இந்தியக் குடியரசின் உறுப்புகளாகவே இருக்கப் போகின்றன.

"இதை மக்கள் தெளிவாக உணரவேண்டும் என்று விரும்புகிறேன்.

"காந்தியார் இந்தியாவின் சரிதத்தை நன்கு படித்துவிட்டு, 'இந்திய மக்களின் மிகப் பெரிய பலவீனம, அவர்களிடத்தில் நிலவும் ஒற்றுமையின்மைதான்' என்று கண்டு கூறினார். இந்தத் தீமையினின்று இன்று நம்மை நாம் பாதுகாத்துக் கொள்வதுடன், அந்த ஒற்றுமையின்மையை ஒழிக்கப் பாடுபட வேண்டும."

—என்று, இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர்தான், வழக்கமான வசைச்சொற்கள், உபதேசங்கள் ஆகியவற்றை உள்ளடக்கி, 'தேசிய சகாய சேனை' என்ற அமைப்பில் பயிற்சி பெறுவோரிடை பேசுகையில இரண்டு நாட்களுக்கு முன்பு குறிப்பிட்டிருக்கிறார்.

குறள் சமுதாயம் காணும் வழி

புதுக்கோட்டை திருக்குறள் கழகக் கூட்டத்தில் டாக்டர் அறம்வளர்த்தார் அறிவுரை

"கற்பு, இல்லறத்தின் அடிப்படையாக அமைகிறது; காதல் வாழ்வுக்கும், சமுதாய நலனுக்கும கற்பு இன்றியமையாதென்பது வள்ளுவர் கொள்கை; அன்பு, படிப்படியே வளர்ந்து அருளாகக் கனிகிறது; அச்சமயத்தில, உள்ளம் அமைதியான பண்பாட்டு நிலையை அடைகிறது.

"மேலை நாடுகளில் அன்பின் கனிவான அருள் உள்ளத்தை, நம் தமிழகத்தில் காண்பதுபோல் காண முடிவதில்லை. மேலும், அங்கு தனக்கென வீடோ, குடும்பமோ இல்லாத மனிதர்கள்தான் அதிகம் காரணம், ஒருவர் பலரை மணக்கும மணமுறையேயாம்.

"நம் சமுதாயத்தாம் நாகரீகம் எனும் பெயரில் இம்முறையைப் பின்பற்றக்கூடாது; அப்படிப் பின்பற்றினால் அன்பும்-அருளும் நிறைந்த குறட் சமுதாயத்தைக் காண முடியாது.

'வள்ளுவர் காலச் சமுதாய நிலை வேறு; அவர் காட்டும் சமுதாய நிலை வேறு. வள்ளுவர் காலம் கோனாட்சிக் காலம்; அறிவியல் வளர்ச்சி பெறாதகாலம். அறிவியல் வளர்ச்சியும், தொழிற்புரட்சியும் ஏற்பட்ட பின்னர், அப்பண்டைய சமுதாய நிலை மாறிவிட்டது. வள்ளுவர் காலத்தில் 'அறம்' சமுதாயத்தின் உயிர் நாடியாக இருந்தது. ஆனால் இன்று 'பணம்' சமுதாயத்தின் உயிர்நாடியாக இருக்கிறது. இது நீங்கி, நாம், குறட் சமுதாயத்தைத் தோற்றுவிக்கவேண்டின், செய்தித்தாள்களும், படக்காட்சிகளும் நல்ல பண்பாட்டை வளர்க்கும் வகையில் பாடுபட வேண்டும்."

இவ்வாறு, திரு. டாக்டர் மு அறம் வளர்த்தார் அவர்கள் 22—1—56 மாலை 4 மணிக்கு புதுக்கோட்டை திருக்குறள் கழகச் சார்பில் நடைபெற்ற இலக்கியக் கூட்டத்தில், 'குறளுக்கேற்ற சமுதாயம்' எனும் பொருள்பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

பருத்தி உற்பத்தி 1950—51-ல் 29 இலட்சம் பேல்களாக இருந்தது, 1954—55-ல் 43 இலட்சம் பேல்களுக்கு உயர்ந்தது

பஞ்சாப் காங்கிரஸ் கோஷ்டிச் சண்டை

மேலிடத்தவரின் சர்வாதிகாரம் அம்பலம்

பஞ்சாப் மாநிலத்தில் முதன் மந்திரியாகவிருந்த பீம்சேன் சச்சார் பதவியிலிருந்து விலகிக் கொண்டதும், அபிவிருத்தித் துறை மந்திரியாயிருந்த சர்தார் பிரதாப் சிங் கைரான், முதன் மந்திரியாக ஆக்கப்பட்டிருப்பதும், பஞ்சாப் காங்கிரசில் ஏற்பட்டிருக்கும் பெரும் கோஷ்டிச் சண்டை, பிளவு இவற்றை மட்டுமின்றி மேலிடத்தவர் இதுபோன்ற விவகாரங்களில் எத்தனை சர்வாதிகாரமாக நடந்துகொள்கின்றனர் என்பதையும் தெளிவாக்கி இருக்கிறது.

நெடுங்காலமாகவே யார் முதன் மந்திரியாகப் பதவி வகிப்பது என்ற தகராறு இருந்தவந்தது கல்வி மந்திரி ஆசாத், இந்த இரு கோஷ்டிகளையும் இணைத்து வைக்கப்பெரும் முயற்சி செய்ததாகவும் ஆனால் அவை பலன் தாராதது மட்டுமின்றி மேலும் மேலும் பிளவு விரிந்துகொண்டு செல்வதற்கே அது பயன்பட்டது என்றும் தெரியவருகிறது.

ஜெகத்நாராயண் மீது குற்றம் சாட்டப்பட்ட நேரத்திலும் அவரை 'யோக்கியராக்கி'க் காட்ட சச்சார் பெருமுயற்சிகள் மேற்கொண்டபோதும் இந்தப் பிளவு வலுத்தது.

மேலும், கடந்த ஆண்டில் அகாலிதளத்தவர் அமிர்தசரசில் விதிக்கப்பட்டிருந்த தடையை எதிர்த்து மகத்தான கிளர்ச்சியில் ஈடுபட்டபோது சச்சார் சர்க்கார் (கிளர்ச்சிக்குப் பணிந்து) திடீரென ஒரு நாள் தடையுத்தரவை திரும்பப் பெற்றுவிட்டபோதும் கைரான் கோஷ்டியினர், தங்களது அணியைப் பலப்படுத்திக் கொண்டனர். மாநில காங்கிரஸ் கூட சச்சார்மீது கண்டனத் தீர்மானம ஒன்றை நிறைவேற்றிறு; இதற்காகச் சச்சார், நம்பிக்கைத் தீர்மானம் கொண்டுவரவிருந்தார்; ஆனால், மேலிடம் அதைத் தடுத்துவிட்டது. பின்னர் கைரானை தனது மந்திரி சபையிலிருந்து நீக்கிவிட அனுமதி கோரினாராம், சச்சார்! ஆனால், மேலிடத்தவர் இதற்கு இணங்க மறுத்ததுடன், நேரு, தேபார் முதலியோர் சச்சார் கைரான், கியானி குருமுக்சிங் என்ற பிரதேசக் காங்கிரஸ் தலைவர் ஆகியோரை உடன் அழைத்து, 'ஒற்றுமையாக இருப்போம்' என்று கூறச் செய்து ஒப்பந்தம் ஒன்றும் எழுதி வாங்கிக்கொண்டனர், ஆனாலும், பிளவு வளர்ந்ததே தவிர—போட்டி மனப்பான்மை மிகுந்ததே தவிரக் குறையவில்லை.

மாநிலப் புது அமைப்புத் திட்டம்பற்றிய சர்ச்சைகளை ஒட்டி சச்சார்—கைரான் கோஷ்டிகளுக்கிடையே இருந்த பிளவு புதிய உருக்கொள்ளத் துவங்கிற்று. உடனே காங்கிரஸ் மேலிடத்தவர், இப்போதைய நிலையில் பஞ்சாபிற்கு ஒரு சீக்கியரே முதன் மந்திரியாக இருப்பது நலம் என்று கருதி, சச்சாரைப் பதவியிலிருந்து விலகிக் கொள்ளுமாறு கோரியிருக்கின்றனர். வேறு வழியில்லாத சச்சார், கைரானுக்கு இடம் தந்துவிட்டு வெளியேறியிருக்கிறார்

ஆளும் கட்சியின் இலட்சணம் மாநிலத்திற்கு மாநிலம மிஞ்சக் கூடிய வகையில் இதுபோன்று தான் இருக்கிறது

இந்தியாவில் இப்பொழுது பிரயாணிகளுக்கான பஸ்கள், 40,000-மும், லாரிகள 90,000-மும் இருக்கின்றன.

வாணியம்பாடியில் கடையடைப்பு

வேலை நிறுத்தம்; கண்டனப் பொதுக்கூட்டம்

வாணியம்பாடி, ஜன. 25—

நேற்று வாணியம்பாடி நகரில் பூர்ண கடை அடைப்புச் செய்யப்பட்டது. பள்ளி, கல்லூரி மாணவர்கள் எவரும் பள்ளி செல்லாததால், அவைகள் மூடப்பட்டன. தோல் பதனிடும் சாலைகளும் பீடித் தொழிற்சாலைகளும் மூடப்பட்டுவிட்டன. சிறிய கடைகள் கூடத் திறக்கப்படவில்லை.

காலையில் காந்தி நகரிலிருந்து தோழர் தொ. சி. அப்பாதுரை தலைமையில் கறுப்புக் கொடி ஊர்வலம் முக்கிய வீதிகள் வழியாகச் சென்று திருவள்ளுவர் படிப்பகத்திற்குச் சென்று முடிவுற்றது.

கண்டனக் கூட்டம்

மாலை 6 மணிக்கு, பெரிய பேட்டை பாலாற்றில் சர்வ கட்சியினரும் அடங்கிய மாபெரும் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. தி. வி. எஸ் விஸ்வநாதம் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

தலைவர் தமது உரையில், தமிழ் நாட்டிலுள்ள எல்லா அரசியல், சமுதாயக் கட்சியினரும், தங்களிடையேயுள்ள கருத்து வேற்றுமைகளை விடுத்துத் தமிழ் நாட்டு எல்லைப் பிரச்சினையில் ஒருங்கு சேர்ந்து சிறந்த திட்டங்களை வகுத்து வெற்றி காணும்வரை போராட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

அடுத்துத் தோழர்கள் அ. தசரதன், கே. பி. சாமிநாதன், சையத் உம்மர், தத்தப்பன், ஞானசேகரன், பாலகிருஷ்ணன் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

பின்னர் நேரு, பண்டிதரின் எதேச்சாதிகாரத் தீர்ப்பைக் கண்டித்தும், தமிழ் நாட்டு அரசியல் கட்சிகள் அனைத்தும் தமிழ் நாட்டு எல்லைப் பாதுகாப்புக் கிளர்ச்சியில் பங்கெடுத்துக்கொள்ளக் கேட்டுக்கொண்டும், புதுவை காரைக்கால் பகுதிகளைத் தமிழ் நாட்டுடன் இணைக்க மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டும், 'சென்னை இராஜ்யம்' என்ற பெயரை மாற்றி 'தமிழ் நாடு' என்று அழைக்குமாறு கேட்டுக்கொண்டும், மற்றும் சில முக்கியத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. (ந நி)

மந்திரி பக்தவத்சலத்திற்குக்

கறுப்புக் கொடி

கும்பகோணம், ஜன. 24—

இன்று காலை 11 மணிக்கு, கும்பகோணம் செட்டிப்புதுத்தெரு (துவரங்குறிச்சி)வில் கூட்டுறவுச் சங்கத் திறப்பு விழாவிற்கு அமைச்சர் பக்தவத்சலம் வந்தபோது, இளைஞர் தமிழ் மன்றத்தைச் சார்ந்து நூற்றுக்கணக்கான இளைஞர்களும், தமிழரசுக் கழகம், சோஷலிஸ்டு கட்சித் தொண்டர்களும் கூடியிருந்து அமைச்சருக்குக் கறுப்புக் கொடி காட்டினர்.

அமைச்சர் பக்தவத்சலம், கூட்டுறவுச் சங்க விழாவில் பேசுகையில் கறுப்புக் கொடி காட்டுகிறவர்கள் பைத்தியக்காரர்கள் என்று பேசினார்.

இளைஞர் தமிழ் மன்றத் தொண்டர்கள் கறுப்புக் கொடி காட்டிய பிறகு ஊர்வலமாகப் பல வீதிகட்குச் சென்று மன்றத்தை அடைந்து அங்கு ஒரு கூட்டம் நடத்தினர். கூட்டத்தில் நகர தி. மு கழகச் செயலாளர் தோழர் அ. பத்மநாபன், குடந்தை-எஸ் ஆர். இராதா ஆகியோர் பேசினர். இறுதியில், தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

* * *

இன்று குடந்தை அரசினர் கல்லூரியைச் சார்ந்த ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவமணிகள் கல்லூரிக்குச் செல்லாது கண்டன ஒலி முழக்கங்களுடன் பல முக்கிய வீதிகளில் ஊர்வலமாகச் சென்று பகல் 12 மணிக்குக் கலைந்தனர். (ந நி.)

திண்டுக்கல்லில் கடையடைப்பு

திண்டுக்கல். ஜன 23—

இன்று திண்டுக்கல் திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகம், தமிழரசுக் கழகம், கம்யூனிஸ்டுக் கட்சி, பிரஜா சோஷலிஸ்டுக் கட்சி ஆகியோரது வேண்டுகோளையொட்டி நகரில் பரிபூரண வேலை நிறுத்தம், கடையடைப்பு மிக அமைதியாக நடைபெற்றது. அமைதிக்குப் பங்கம் வராதபடி தோழர்கள் பி. சமதர்மம், முத்துலக்கையன், கிரி, மதிமாறன், பி ராஜா ஆகியோர் கண்காணித்து வந்தனர்.

மாலை 5 மணிக்குக் காந்தி மைதானத்திலிருந்து சர்வகட்சியினரடங்கிய மிகப் பெரிய ஊர்வலம் கண்டன ஒலி முழக்கங்கள் எழுப்பிக்கொண்டு நகரின் முக்கிய வீதிகள் வழியாகச் சென்று காந்தி மைதானம் வந்தடைந்தது. தோழர் முத்துலக்கையன் (த. க.) தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பி. சமதர்மம் (தி. மு. க) எஸ் மதிமாறன் (தி க.), சண்முகம் (பி. சோ.), ஏ பாலசுப்பிரமணியம் (கம்), க. ஆறுமுகம் (கம்), கே. எஸ். சந்தானம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தேவிகுளம்—பீர்மேடு

டில்லி முடிவுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள்

சென்னை, ஜன. 25—

கடந்த 23-ந் தேதியன்று சென்ட்ரல் இரயில் நிலையத்தில், மந்திரி சுப்பிரமணியத்தின் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடத்திய தமிழரசுக் கழகத் தொண்டர்கள் 15 பேர்களுக்கு ரூ. 5 அபராதம்—தவறினால் ஒரு வார சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அபராதம் கட்ட மறுத்துத் தோழர்கள் சிறை சென்றிருக்கின்றனர்.

காஞ்சி:

காஞ்சி நகரில் ஊர்வலம், பொதுக் கூட்டம், ஆர்ப்பாட்டம் எதுவும் நடத்தக் கூடாதென மாவட்ட உதவி போலீஸ் அதிகாரி தடை உத்தரவு பிறப்பித்திருக்கிறார்; இந்த மாதம் முடிய தடை அமுலாகும்.

சோஷலிஸ்ட் கோரிக்கை

சென்னை நகர சோஷலிஸ்டுக் கட்சியினர், மாநில புது அமைப்பிற்கு மொழியையே அடிப்படையாகக் கொள்ளவேண்டும் என்றும், தேவிகுளம், பீர்மேடு நெய்யாற்றங்கரை, சித்தூர், செங்கோட்டை வட்டங்கள் எல்லாம் தமிழ் வட்டங்கள் என்பதால் தமிழ் நாட்டிற்கு வரவேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

மாணவர்கள் ஊர்வலம்

சென்னை தியாகராயநகர் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் 200 பேர்கள் பள்ளி செல்லாமல் 24-ந் தேதியன்று, நகரின் முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலம் வந்தனர்.

வர்த்தகக் கழகத் தந்தி

தமிழ் நாடு வர்த்தகக் கழகத்தினர், தேவிகுளம்—பீர்மேடு வட்டங்கள் தமிழகத்துடன் இணைக்க வேண்டும் என்று கோரி டில்லி சர்க்காருக்குத் தந்தி ஒன்று அனுப்பியிருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

அறந்தாங்கி மாணவர்கள் கண்டன அணிவகுப்பு

அமைச்சருக்குமுன் ஆர்ப்பாட்டம்!

அறந்தாங்கி, ஜன. 28—

பீர்மேடு, தேவிகுளம், செங்கோட்டை முதலிய பகுதிகளை மீண்டும் தமிழகத்துடன் சேர்க்கக் கோரும்வண்ணம், சென்ற 28-ந் தேதியன்று, இவ்வூர் கழக உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் அடையாள அணிவகுப்பு ஒன்று நடத்தினர். கறுப்புக் கொடி பிடித்து, கறுப்புச் சின்னம் அணிந்து, கண்டனக் குறிப்புகளடங்கிய அட்டைகளைத் தாங்கிக்கொண்டு ஒலி முழக்கம் எழுப்பிக்கொண்டு, காலை சுமார் 9 மணிக்கு புகைவண்டி நிலையத்திலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டனர்.

புயலால் பாதிக்கப்பட்டப் பகுதிகளைப் பார்வையிட வந்திருந்த மந்திரி பரமேஸ்வரன் தங்கியிருந்த விடுதிக்கு முன்பு நின்றுகொண்டு அமைதியான முறையில், கட்டுப்பாட்டுடன் கண்டன ஒலிகளை எழுப்பித் தங்களின் அதிருப்தியைத் தெரிவித்தனர். சிறிதுநேரத்திற்கெல்லாம் மந்திரியின் கார் அணிவகுப்பைத் தாண்டி வேகமாகச் சென்றபொழுது மாணவர்கள் உரத்தக் குரலில் கண்டன ஒலிகளை எழுப்பினர்.

பின் மாணவர்கள் நகரின் முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று பிற்பகல் 2 மணி சுமாருக்குப் பள்ளியின்முன்வந்து அமைதியாகக் கலைந்து சென்றனர். ஒழுங்குடனும் கட்டுப்பாடுடனும் நடந்துகொண்ட மாணவர்களை உள்ளூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் உள்படப் பொது மக்கள் அனைவரும் பாராட்டினர்.

கரூர்

கரூர் முனிசிபல் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் 300-க்கு மேற்பட்டவர்கள் ஒன்றுகூடிப் பள்ளிக்குச் செல்லாமல், கண்டன ஒலி முழக்கங்கள் எழுப்பிக்கொண்டு ஊர்வலமாகச் சென்றார்கள். ஊர்வலத்தைத் தோழர்கள் கே. ஆர். வீரப்பன், ஓ. கே. குப்புசாமி, செல்வன் ஆகியோர் முன்னின்று நடத்திச் சென்றார்கள்.

காடையாம்பேட்டை:

24—1—56ல் இவ்வூரிலுள்ள கடைகள், தொழிலகங்களைச் சேர்ந்த தொழிலாளர்களும், பள்ளி மாணவர்களும் வேலைக்குச் செல்லாமல் ஆர்ப்பாட்டம் நிகழ்த்தினர். தி. மு. கழகம், தமிழரசுக் கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த 11 பேர்கள் அடங்கிய போராட்டக் குழுவின் தலைமையில், சர்வ கட்சி ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நடைபெற்றது. பொதுக்கூட்டத்திற்குத் தோழர் கே. அன்னாமலை (தி. மு. க.) தலைமை வகித்தார். தமிழரசுக் கழகத் தோழர்கள் அ. பெ. நடேசன், ப. ஞானசேகரன், குப்புசாமி, தோழர் சிற்றுனி-சுப்பிரமணியம் (தி.மு.க.) ஆகியோர் சொற்பொழிவாற்றினர். கூட்ட இறுதியில் கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

பரமக்குடி

பரமக்குடி நகரில், 24—1—56ல் தி. மு. கழகம், கம்யூனிஸ்டு கட்சி, தமிழரசுக் கழகம், பிரஜா சோஷலிஸ்டு கட்சி ஆகிய கட்சிகளின் வேண்டுகோளின்படி நகரின் எல்லாக் கடைகளும் அடைக்கப்பட்டன. உயர்நிலைப்பள்ளிகளும் மூடப்பட்டன.

மாலை 4 மணிக்கு தோழர் நா. மு ரா. லிங்கன் (தி. மு. க.) தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது. மாலை 6 மணிக்கு பெருமாள் கோவில் திடலில் சர்வகட்சிப் பொதுக் கூட்டம் தோழர் சுந்தர் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஆர். எஸ். பிரகாசம் (தி. மு. க.), எஸ். நித்தியானந்தம் (தி. மு. க.), எம். ஆதிமூலம் (கம்), காளிமுத்து, முருகாண்டி (ம.சோ.) கந்தன், அரிகிருஷ்ணன் (த. க.) ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சின்னாளப்பட்டி

சின்னாளப்பட்டி திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், தமிழரசுக் கழகம், கம்யூனிஸ்டு கட்சி ஆகிய கட்சிகள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க 24-1-56ல் நகரிலுள்ள அரவை மில்கள், சிற்றுண்டிச்சாலைகள், பலசரக்குக் கடைகள், ஜவுளிக் கடைகள், சினிமா கொட்டகைகள், நெசவு, பாவுத் தொழில்கள் அத்தனையும் மூடப்பட்டன.

மாலை 4 மணி அளவில், ராயல் தியேட்டருக்கு வடபுறமுள்ள திடலிலிருந்து புறப்பட்ட கண்டன ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு கண்டன முழக்கம் செய்தனர். பின்னர் மாலை 5-30 மணி அளவில் ஊர்வலம் முடிவடைந்தது.

மாலை 6 மணி அளவில் ராயல் தியேட்டருக்கு வடபுறமுள்ள திடலில் தோழர் கே. என். எஸ். சென்னையா தலைமையில் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சர்வகட்சித் தோழர்களும் சொற்பொழிவாற்றிய பின்னர், இறுதியில் கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

தமிழகமெங்கும் திராவிடர் திருநாள்

'தைப் பொங்கலன்று திராவிடர் திருநாள் கொண்டாடுவீர்' என்று தி. மு. கழகப் பொதுச்செயலாளர் தந்திருந்த அறிக்கைக்கு ஒப்ப, நாடெங்கும கழகத் தோழர்களும், பொதுமக்களும் வெகு சிறப்பாக விழாக் கொண்டாடியிருக்கின்றனர்.

சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கல், எளியோருக்கு உணவளித்தல், விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல், சிறப்புக் கூட்டங்கள் கூட்டுதல், இசை அரங்கம்-நாடகம் நடத்துதல் போன்ற நிகழ்ச்சிகளுடன் விழாககள் நடைபெற்ற விபரங்கள் இங்கு சுருக்கித் தரப்பட்டுள்ளன :—

புலியகுளம்

15—1—56ல், கிளைக் கழகச் சார்பில், தோழர் கா. பொன்னுலிங்கம் தலைமையில் விழா கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

திருவில்லிப்புத்தூர்

14—1—56 காலை 8 மணிக்கு, தோழர் மா. சிவப்பிரகாசம் அவர்களால் கழகக் கொடியேற்றப்பட்டது. சிறுர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. மாலை 3 மணிக்கு சிறுமிகளின் கோலாட்டமும் கழகத் தோழர்களின் கயிறு இழுப்பு, ஓட்டங்கள் முதலிய விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டன. தோழர்களின் சிலம்ப விளையாட்டுகளும் நடந்தன. போட்டியில் வெற்றி பெற்றோருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. இரவு 7 மணிக்கு, தோழர் கணபதி குழுவினரின் இன்னிசை விருந்து நடைபெற்றது.

புதுக்கோட்டை

15—1—56ல், புதுக்கோட்டை. வி. வி. டி. மைதானத்தில் தோழர் எஸ் நடராசன் எம் சி தலைமையில் விழா நடைபெற்றது. தோழர்கள் ஆ. மீ. அலிசேக் மன்சூர், சு. ரா. கந்தசாமி, ஆ. அண்ணாமலை ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின்னர், பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கணியூர் அழகிரி மன்றம்

19—1—56 இரவு 8 மணிக்கு, மன்ற நிர்வாகக் குழுக் கூட்டம், மன்ற அலுவலகத்தில் நடைபெற்றபோது, வரவு—செலவு கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், தோழர் கே. ஏ. சந்திரசேகரனைச் செயலாளராகக்கொண்ட புதிய செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

குனியமுத்தூர்

16—1—56ல், கிளைக் கழகச் சார்பில் தோழர் பி. முருகானந்தம் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் தேவராசு, சி. நெடுங்கிள்ளி, தங்கமாணிக்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

அகரம்

15—1—56ல், தி. மு. கழகச் சார்பில், தோழர் இல. பால்பாண்டியன் தலைமையில் விழா நடைபெற்றது. ஊர்வலத்தின் போது, சிலம்ப விளையாட்டுகளும், கயிறு இழுத்தல் போட்டியும் நடைபெற்றது. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அண்ணாவின் படம் பரிசளிக்கப்பட்டது. இரவு 7 மணிக்கு விழாப் பொதுக் கூட்டம் நடைபெற்றபோது, தோழர்கள் இல. அறவேந்தன், நா. பொன்னுசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

க. புதுப்பட்டி

15—1—56 காலை 10 மணிக்கு பொங்கல் விழா ஆரம்பமானது. மாலை 1 மணி முதல் 4 மணிவரை 'மஞ்சி விரட்டு' சிறப்பாக நடைபெற்றது. தோழர் பி என். வி. லோகநாதன் முன்னிலையில் நடைபெற்ற 'மஞ்சி விரட்டு'க்கு ஏராளமான காளைகள் வந்திருந்தன. விழா சிறப்பாக நடைபெற்றது.

16—1—56 மாலை 6 மணிக்கு, இவ்வூர் அழகிரி திடலில், தி. மு. கழகச் சார்பில் பொங்கல் விழாப் பொதுக்கூட்டம், தோழர் வி. பி. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் சி. பி. சிற்றரசு சொற்பொழிவாற்றினார்.

வேலூர் (சேலம்)

14—1—56 மாலை 6 மணிக்கு, வேலூர் வ. உ. சி. திடலில் தோழர் எம். கருப்பண்ணன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் : லோ. கருப்பையா, வி. ஏ. இராமநாதன். அ. தமிழரசு ஆகியோர் பேசினர்.

பிரான்மலை

20—1—56ல் பிரான்மலை அறிஞர் அண்ணா மன்றச் சார்பில் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்று மாலை, காந்தி சதுக்கத்தில் தோழர் சே. சி. சாமி தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தலைவர் கழகக் கொடியை ஏற்றினர். தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

மாட்லாம்பட்டி

14—1—56ல், கிளைக் கழகச் சார்பில் பொங்கல் விழாவையொட்டி, கொடி ஏற்றுவிழாவும் ஊர்வலமும் நடைபெற்றது. கூட்டத்தில்கலந்துகொண்டவர்களுக்கு தின்பண்டங்கள் வழங்கப்பட்டன.

புயல் நிதிக்கு அன்பளிப்பு

1—1—56ல், சென்னை எழும்பூர் ஸ்டேடியத்தில் நடைபெற்ற புயல் நிவாரண நிதிக் கூட்டத்தில், அண்ணா அவர்களிடம் தோழர் வஜ்ஜிரவேல் (ஈவினிங் பஜார், மூர் மார்க்கட்) அவர்கள் பெரிய மின்சார விளக்கைப் புயல் நிவாரணத்திற்காக ஏலம் போடக் கொடுத்தார். அந்த மின்விளக்கு தோழர் கே. ஆர் இராமசாமி அவர்களால் ரூ 65 ஏலத்தில் எடுக்கப்பட்டது.

மாநில மாநாடு நிதி

இலங்கை—யாழ்ப்பாணத் தோழர்களின் அன்பளிப்பு

மாநில மாநாடு நிதிக்காக இலங்கை யாழ்ப்பாணத்தோழர்களின் சார்பாக திருச்சித் தோழர் எஸ். தேவதாசன் அவர்களால் அன்பளிப்பாக அனுப்பிவைத்த ரூ. 75-ம் வரப் பெற்றோம்.

—தி. மு. க. தலைமை நிலையம்

12 உறுப்பினர்கள் பதவி விலகல்

பம்பாய் நகரசபை மெலிகிறது !

பம்பாய், ஜன. 28—

'பம்பாய் நகரைத் தலைநகராகக் கொண்ட சம்யுக்த மராட்டியம் அமைக்கப்பட வேண்டும்' என்று, பம்பாய் நகராண்மைக் கழகம் அண்மையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றியிருந்தது. அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டதையொட்டி, நேற்று 12 நகராண்மைக் கழக உறுப்பினர்கள் தங்கள் பதவியை இராஜிநாமாச் செய்தனர். இந்தப் பன்னிருவரில் பதின்மர் காங்கிரஸ் உறுப்பினர்கள் என்றும், மற்றிருவர் சோஷலிஸ்டுக் கட்சியினர் என்றும் கூறப்படுகிறது.

இவர்களைத் தொடர்ந்து, நாளை மறுநாள் மக்கள் சோஷலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த 25 உறுப்பினர்களும் தங்கள் பதவியைத் துறக்கலாம் என்று நம்பப்படுகிறது. ஏற்கனவே அவர்கள் அனைவரும் தங்கள் பதவி விலகல் கடிதங்களைத் தங்கள் கட்சித் தலைவரிடம் ஒன்றாகச் சேர்ந்து கொடுத்தார்களாம். 'இராஜிநாமாக் கடிதங்களைத் தனித் தனியாகத்தான் கொடுக்க வேண்டும்' என்று கமிஷனர் கேட்டுக் கொண்டதின் பேரில் இன்று கொடுக்க முடியவில்லை என்று தெரிகிறது.

இதற்கிடையில் ம. சோ. கட்சித் தலைவர் அசோக் மேத்தா, தமது கட்சியினரிடம் 'அவசரப் பட்டு உங்கள் பதவிகளை இராஜிநாமாச் செய்ய வேண்டாம்' என்று வேறு கேட்டுக் கொண்டிருக்கிறாராம்: தமது கட்சியினரை மட்டுமின்றி இதர கட்சியினரையும் இவ்வாறு அறிவுறுத்தியிருக்கிறாராம்! என்றும் அவரது அறிவுறுத்தலுக்கு எவரும் செவி சாய்க்கவில்லை என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில், தங்கள் பதவிகளைத் துறந்த 10 காங்கிரஸ் நகராண்மைக் கழக உறுப்பினர்கள் மீதும், காங்கிரஸ் செயற்குழுத் தீர்மானப்படி ஒழுங்கு நடவடிக்கைகள் எடுப்பது என்று முடிவு செய்திருப்பதாக பிரதேசக் காங்கிரஸ் தலைவர் எஸ். கே. பட்டீல் கூறினாராம். இதை மறுத்த அந்தப் பதின்மரும், 'காங்கிரஸ் செயற்குழுவின் தீர்மான முடிவுகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், மாநில சட்டசபை உறுப்பினர்கள் ஆகியோரைத்தான் கட்டுப்படுத்தும் — நகராண்மைக் கழக உறுப்பினர்களை எவ்வகையிலும் கட்டுப்படுத்த முடியாது,' என்று சுடச்சுடப் பதில் அளித்திருக்கின்றனர்!

★

தாணா நகராண்மைக் கழக உறுப்பினர்கள் விலகல்

தாணா நகராண்மைக் கழக உறுப்பினர்கள் 17 பேர் சென்ற வெள்ளிக்கிழமை தங்கள் பதவிகளினின்றும் விலகிக்கொண்டனர். இவர்களைத் தவிர ஏற்கனவே 6 பேர் இராஜிநாமாச் செய்துவிட்டிருக்கின்றனர். நகராண்மைக் கழகக் கூட்டத்தில், 'கோரம்' நிலவச் செய்வதற்குத் தேவையான எண்ணிக்கை உறுப்பினர்கள்கூட இல்லாமல் வெறிச்சோடிக் கிடக்கிறதாம்!

'எதிர்த்துப் போராட வேண்டும்'

தட்சிணப் பிரதேசத் திட்டம்பற்றி கம்யூனிஸ்டுகள் கருத்து

"தட்சிண ராஜ்யத்தையும், இதர பிரதேச மண்டலங்களையும் நிறுவ காலப்போக்குக்கு நேர்விரோதமாகக் கடைசியாக முடிவெடுத்துள்ள காங்கிரஸ் தலைமையின் செயலைக் கண்டனம் செய்யும் சகலருடனும் சேர்ந்து தனது கண்டனத்தை இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ்நாடு கமிட்டி தெரிவித்துக் கொள்கிறது.

"இந்திய ஐக்கியம் என்ற பெயரால் இப்போதுள்ள வங்காளம், பீகார், சென்னை மாநிலங்களைக் கூட ரத்துச் செய்து ஒன்றோடொன்றை இணைத்துப் பல மொழிகள் பேசும் பகுதிகளை ஒரு மாநிலமாகப் பிரிட்டிஷார் வைத்திருந்த மாதிரியில் உருவாக்க முயல்கிறார்கள்.

"இது மிகவும் படுமோசமான தாகும்: இந்த முயற்சி பிற்போக்கானது; தேசிய இயக்கத்தின் தெள்ளத் தெளிவான தீர்ப்புக்கு நேர்விரோதமானது; நமது மக்களின்—ஜனநாயகப் பகுதிகளின் மிகப் பெரும்பான்மையினர் விருப்பத்திற்கு எதிரானது என்று கம்யூனிஸ்டுக் கட்சி கண்டனம் செய்கிறது.

"இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குள்ள ஒரே வழியெல்லாம் மாநிலப் புனரமைப்புக் குழு அறிக்கை சிபாரிசுகளின் இயல்பான முடிவுகளைக் கருத்தில் கொண்டு, பதினாறு மொழிவாரி மாநிலங்களை அமைக்கவேண்டும்; பம்பாய் நகரமுட்பட மகாராஷ்டிர மாநிலத்தை நிறுவவேண்டும்; எல்லைத் தகராறுகளைக் கூட்டாகவும் ஜனநாயகக் கோட்பாடுகள் மூலமும் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே. நாட்டிலுள்ள எல்லா தேசிய இனங்களிடையிலும் ஐக்கியத்தை உருவாக்குவதற்கு அவசியமான சூழ்நிலைகளை உறுதிப்படுத்துவதற்கு கம்யூனிஸ்டுக் கட்சி முன்னணியில் நின்று பணியாற்றும்.

'நம்பிக்கைத் துரோகம்!'

"மொழிவாரியாக நாட்டைப் பிரிப்பதற்கும், தமிழுக்கும் தாங்களே தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சென்னை முதலமைச்சரும், நிதி அமைச்சரான சுப்பிரமணியமும் ஏற்கனவே இந்த முயற்சிக்குச் சாதகமாகத் தங்கள் கருத்தைத் தெரிவித்திருப்பது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. கோட்பாடுகளுக்கும் மக்களின் விருப்பத்திற்கும் இதைக் காட்டிலும் நம்பிக்கைத் துரோகமிழைக்க முடியாது.

"இந்த அபாயத்தை எதிர்த்துப் போராடவும், கேரளம், கர்நாடகம், தமிழ் நாடு மற்றுமிதர மாநிலங்கள் உருவாவதற்கு ஐக்கியமாக உத்தரவாதமளிக்கவும், எல்லா எல்லைத் தகராறுகளையும் நியாயமாகவும் ஜனநாயக முறையிலும் தீர்ப்பதற்கும் காங்கிரஸ் உள்பட சகல கட்சிகளும், தனி நபர்களும் ஒன்று சேர்ந்து முன்வர வேண்டுமென்று கம்யூனிஸ்டுக் கட்சி வேண்டிக் கொள்ளுகிறது.

"மொழிவழி மாநிலங்களின் அமைப்பிற்கே ஆபத்து ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழ்ச்சியை எதிர்த்து முறியடிப்பதற்குத் தமிழ் மக்கள் அனைவரும் ஒரே மனிதனைப் போலத் திரண்டெழ வேண்டும்."

மேற்கண்டவாறு ஒரு அறிக்கையினை தமிழ் நாடு கம்யூனிஸ்டுக் கட்சிச் செயலாளர் எம். ஆர். வெங்கட்ராமன் அவர்கள், பத்திரிகைகளுக்கு அனுப்பியிருக்கிறார்.

சொற்பயிற்சிக் கூட்டம்

29—1—56 காலை 10 மணிக்கு, சென்னை 39-வது வட்ட தி. மு. கழகப் பணி மனையில், தோழர் என். கிருட்டிணன் தலைமையில் 'இன்றைய நிலை' எனும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

29—1—56 காலை 9-30-மணிக்கு, சென்னை சேத்துப்பட்டு வ. உ. சி இளைஞர் கழகப் பணி மனையில், தோழர் வ சங்கரநாராயணன் தலைமையில் 'மதமும் மக்களும்' என்னும் பொருள்பற்றிப் பல தோழர்கள் பேசுவர்.

திருச்சி நகர தி. மு. கிளைக் கழகங்களுக்கு

"திருச்சி நகர தி. மு. கழகத்திலிருந்து உறுப்பினர் பதிவுச் சீட்டு வாங்கிச் சென்ற நகர உட்கிளைக் கழகத் தோழர்கள், 31—1—56-க்குள் நகர தி. மு. கழகச் செயலாளரிடம் அப்பதிவுச் சீட்டுக்களை ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர். அதற்குப் பிறகு வரும் பதிவுச் சீட்டுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது,"

என்று, திருச்சி நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் எம். எஸ் மணி அறிவிக்கிறார்.

தீர்மானங்கள்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

யும், அரசாங்கமும் தெளிவாகக் கூறியிருந்தும், அந்த அநீதியை மத்திய அரசாங்கமும் அங்கீகரித்ததோடு, பசில் அலிக் குழு வழங்கிய செங்கோட்டைத் தாலுகாவின் பெரும் பகுதியைக் கேரளத்தில் சேர்த்துவிட்ட செய்கையை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது. இத்துடன் சென்னை—ஆந்திரா எல்லையோரத்திலுள்ள தமிழ்ப்பகுதிகளுக்கு எல்லைக் குழு நியமிப்பதாக மத்திய அரசாங்கம் அளித்த வாக்குறுதி இதுவரை நிறைவேற்றப்படாததற்கு இக்கூட்டம் அதிருப்தி அடைகிறது. ஆகவே, கேரளத்தோடும், ஆந்திரத்தோடும் தமிழகத்திற்குள்ள எல்லைப் பிரச்சினையைத் தீர்க்க ஒரு எல்லைக் குழு நியமித்து ஜனநாயக வழியில் தீர்ப்பளிக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை இக்கூட்டம் வற்புறுத்துகின்றது.

2. மத்திய அரசாங்கத்தார், மொழி வழி மாநிலக் கோரிக்கையைக் கொள்கை ரீதியாக ஏற்காததை எதிர்த்தும், எல்லைப் பிரச்சினையில் தமிழருக்கு நியாயம் வழங்காததைக் கண்டித்தும், தமிழர் விரும்பாத 'தட்சிண ராஜ்ய' யோசனையை நிராகரித்தும் பிப்ரவரி 20-ந் தேதி தமிழகம் முழுவதும் கடையடைப்பும், வேலை நிறுத்தமும் செய்யுமாறு பொது மக்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்கின்றது.
3. 'சென்னை ராஜ்யம்' என்ற பெயரை நீக்கித் 'தமிழ் நாடு' என்று இந்த நாட்டிற்குப் பெயர் அமைக்கவேண்டும் என்று இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

* * *

சர்வ கட்சிச் சார்பில் அமைந்துள்ள இந்தச் செயல் கமிட்டியில், ம. பொ. சி. அமைப்புச் செயலாளராகத் துணை புரிந்து வருவார்.

இரண்டோர் நாட்களில் இதற்கானதோர் தனி அலுவலகம் ஏற்படுத்தப்பட இருக்கிறது.

இந்த மாநாடு முடிவு கேட்டு 'உமா' அலுவலகத்துக்கு வெளியே கூடியிருந்த எழுச்சி மிக்க மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து, 'கூட்டு முயற்சி வெற்றி பெறுக! சர்வகட்சிச் செயல் கமிட்டி வெற்றி பெறுக!' என்று வாழ்த்தினர். பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களாயினும், இந்த நியாயமான உரிமைக் கிளர்ச்சியில் ஒன்றுபட்டுச் செயலாற்றத் திட்டம் தீட்டப்பட்டிருப்பது, தமிழகத்தில் இதுவே முதல் முறையாகும்.

இந்த மகத்தான ஒற்றுமை கண்டு மக்கள் புதிய எழுச்சி பெறுவர் என்பது திண்ணம்.

★

கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள்:—

ச. ர. நல்லசிவம் எம். எல். ஏ., பி. டி. ராஜன் எம். எல். ஏ., எம். சின்னசாமி, ஆர். சீனிவாசமூர்த்தி, ஏ சுப்பிரமணியம், வி. சு. சின்னதுரை, மணலி கந்தசாமி, ப. ஜீவானந்தம், கே. வி கே இராமசாமி, எஸ் சுயம்பிரகாசம், கே. விநாயகம், சி. வி. சீனிவாசன் (சித்தூர்), எம் ஜானகிராமன் (சித்தூர்), எஸ். சி. சி. அந்தோணி பிள்ளை, எஸ். செல்லசாமி, டி கே. சண்முகம், இ. எஸ் தியாகராசன், நாரண துரைக்கண்ணன், சி. என். அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன், எஸ். எச் பிளச்சர், கவிஞர் பாரதிதாசன், கா. அப்பாதுரை, ஏ. ரத்தினம், சி. பா ஆதித்தன், ஜி. உமாபதி, எம் ஏ. ரஷீத், எஸ் ரங்கநாதன், சின்ன அண்ணாமலை, ம. பொ. சிவஞானம்.

****

தேவிகுளம், பீர்மேடு பற்றி

பொதுக்குழு முடிவு

★

30—1—56 திங்கள் மாலை 5 மணிக்கு

திருவல்லிக்கேணி கடற்கரையில்

நடைபெறும் மாபெரும் பொதுக்கூட்டத்தில்

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

விளக்கிப் பேசுவார்

—சென்னை மாவட்ட தி. மு. கழகம்

****

அண்ணா தலைமையில் எழுத்தறிவித்தல்

தோழர் வேதாசலம் இல்லத்தில் இனிய விழா

தோழர் எஸ். எஸ். பி. லிங்கம் (வேதாசலம்) அவர்களது பெண் குழந்தைகள் மணிமேகலை, அழகுராணி ஆகியோருக்கு எழுத்தறிவித்தல் விழா, நமது அண்ணா அவர்கள் தலைமையில், சென்னை ராஜா அண்ணாமலைபுரத்திலுள்ள அவரது இல்லத்தில் 25—1—56 மாலை 5 மணிக்கு நடைபெற்றது. வாலாஜாபாத் இந்து மதப் பாடசாலைத் தலைவரான திரு. மாசிலாமணி (முதலியார்) அவர்களால் குழந்தைகளுக்கு எழுத்தறிவிக்கப் பட்டது.

விழாத் துவக்குமுன், விழாவிற்கு வந்திருந்த அனைவருக்கும் தேநீர் விருந்தொன்றையும் தோழர் லிங்கம் அவர்கள் அளித்தார். தோழனூர் திரு இராமு பிள்ளை அவர்களது நாதசுவர இசை விருந்து நடைபெற்றது.

பின்னர், குழந்தைகள் மணிமேகலை, அழகுராணிககுத் தோழர்கள் க அன்பழகன், அ. பொன்னம்பலனார், ஏ கோவிந்தசாமி, எம். எல். ஏ., தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் வாழ்த்துரையும், பலர் பரிசுகளும் வழங்கினர்.

இறுதியில், இசைப் பெரும் புலவர் திருவாவடுதுறை டி என். இராசரத்தினம் அவர்களது குழுவினரின் நாதசுவர இசை நடைபெற்றது.

இரவு 10 மணியளவில் அண்ணா அவர்களது கருத்தமிகு முடிவுரையுடன் விழா இனிது முடிவுற்றது.

(ந - கி.)

இந்தியக் கார்பன் கம்பெனியின் அளவுகடத்தல்

உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் தொழிலாளர் வெற்றி

சென்னை, ஜன. 23—

இன்று பிற்பகல் 1 மணிக்கு சென்னை நேஷனல் கார்பன் கம்பெனியில் உள்ளிருப்புப் போராட்டம் உபதலைவர் கே. எஸ். ராமலிங்கம் தலைமையில் நடத்தப்பட்டது.

அநியாயமான குற்றப்பத்திரிகைகளை மூன்று தொழிலாளர்கள் மீது சுமத்தியும், இவையல்லாது தோழர் எம். கருப்பன் என்பவரை திடீரென்று நியாயமற்ற முறையில் தற்காலிகமாக வேலையைவிட்டு விலக்கியும் தொழிலாளர்கள் மீது பழி வாங்கியதை எதிர்த்து மேற்படி போராட்டம் நடத்தப்பட்டது.

தொடர்ந்து 30 மணி நேரப் போராட்டத்திற்குப் பிறகு நிர்வாகத்தினரும், சங்கத் தலைவர்கள் எஸ். கிருட்டிணமூர்த்தி, சீதாராம் ஆகியோரும், லேபர் கமிஷனரும் கலந்து பேசியதில், மேற்படி குற்றப் பத்திரிகைகளை நிறுத்திவைத்தும், தற்காலிக வேலை நிறுத்தத்தை உடனடியாக ஒரு முடிவுக்குக் கொண்டுவரவும் மேற்படி நிர்வாகத்தினர் ஒப்புக்கொண்டதின் பேரில் போராட்டம் வெற்றிகரமாகத் திரும்பப்பெறப்பட்டது.

திராவிடர் திருநாள்

29—1—56 மாலை 5 மணிக்கு, சென்னை நுங்கம்பாக்கம் மேற்கு குளக்கரைத் தெருவில் அமைந்துள்ள மக்கள் மகிழ்ச்சி மன்றச் சார்பில் பொங்கல் விழாக் கூட்டம் நடைபெறும். தோழர் டி. கே. சீனிவாசன், மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம் ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ